පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය
பொலிஸ் ஊடகப் பிரிவு
POLICE MEDIA DIVISION
සුහුරුපාය, බත්තරමුල්ල

තැ.පෙ.අංකය
த. பெ.இ
Po.Box No 10120

ෆැක්ස්
தொலைநகல
Fax 011-2171635

දුරකථන
தொலைபேசி
Telephone 011-2887973 (HUNTING)

වෙබ්.ලිපිනය
இணையதளம்
Web Site www.Police.lk

ඊ මේල්
மின்னஞ்சல்
E-mail dir.media@police.gov.lk

මගේ අංකය
எனது இலக்கம்
My NO 1622/ 2024

ඔබේ අංකය
உமது இலக்கம்
Your No / 2024

දිනය
திகதி
Date 23/10/2024

நேரம் - 1412

**ஊடக**

## வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் – பொலிஸ் தலைமையகம்.

எதிர்வரும் காலங்களில் அதிகளவான சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகைத்தர உள்ளதாக இதுவரை கிடைத்த தகவலின் அடிப்படையில் அவதானிக்க முடிகின்றது. இவை இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதுடன் இலங்கை தொடர்பாக வெளிநாட்டு பிரஜைகளின் மத்தியில் ஏற்படும் கௌரவம் மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கான சிறந்தொரு சந்தர்ப்பமாகும். வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகளை கவரும் நாடாகவும், நமது நாட்டுக்கு வருகைத்தரும் சகல வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு, அவர்கள் எதிர்பார்க்கும் மகிழ்ச்சி, கேளிக்கை அதே போன்று அறிவு ஆகியவற்றை சுதந்திரமாக பெற்றுக்கொள்வதற்கான தேவையான சூழலை உருவாக்கித்தருவது நாம் அனைவரினதும் பொறுப்பாகும்.

அதே போன்று மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் கிழக்கு ஐரோப்பா நாடுகளில் ஏற்படும் யுத்த நிலைமைகளை கருத்திற் கொண்டு வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பிற்காக விசேட பாதுகாப்பு வேலைத்திட்டங்களை

நடைமுறைப்படுத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்புடன் இலங்கை பொலிஸ் மற்றும் புலனாய்வுப் பிரிவினர்களின் விசேட வேலைத்திட்டங்களினூடாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதன் போது பொலிஸ் சுற்றுலாப் பிரிவை மேலும் பலப்படுத்தப்பட்டு அவற்றை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு சகல பொலிஸ் நிலையங்களிலுக்கும் இது தொடர்பாக பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய அவர்களால் விசேட அறிவுறுத்தல் வழங்கப்படவுள்ளது. இதன் முதற்கட்டமாக அனைத்து சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு தொடர்பாகவும் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் தொடர்பாக முறையிட 1997 எனும் விசேட தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தும் சந்தர்பத்தை இன்றைய தினத்திலிருந்து ஏற்படுத்திக் கொடுக்கப்படுள்ளது.

சுற்றுலா விடுதி உரிமையாளர்கள், அதன் நிருவகிக்கும் குழுவினர்கள், அதே போன்று சுற்றுலாத் துறைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து நபர்களும் தற்போது வரை மேற்கொள்ளப்படும் தங்களது கடமைகள் மிகவும் பாராட்டப்படுவதுடன், எதிர்காலத்தில் சுற்றுலா பயணிகளின் உயிர் மற்றும் உடமைகளின் பாதுகாப்பிற்கு தங்கள் எல்லைக்குற்பட்ட பிரதேசங்களில் சிறந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொலிசார் உறுதியுடன் உள்ளனர். எந்தவொரு சந்தர்ப்பங்களிலும் அவர்கள் தனது அதிகார வரையறைக்குற்பட்ட பொலிஸ் பிரதேசங்களில் பொலிஸ் நிலையங்களை ஒருங்கிணைத்து நடவடிக்கை எடுப்பதுடன், எதிர்காலத்தில் இது தொடர்பாக பொலிஸ் நிலையங்களுக்கு தேவையான அறிவுறுத்தல்களும் வழங்கப்படும்.

வெளிப்புற திருடர்கள் மற்றும் எதிரிகளினால் ஏற்படும் அச்சுறுத்தல்கள் போன்று சில ஊழியர்களினால் ஏற்படக் கூடிய துன்புறுத்தல்கள் தொடர்பில் சகல தரப்பினரும் அவதானம் செலுத்தப்பட வேண்டியதுடன், இலங்கை பொலிசினால்

மேற்கொள்ளப்படும் புதிய வேலைத்திட்டங்களுடன் இது தொடர்பாக சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

**பொலிஸ் ஊடகப் பிரிவு**